**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம், (இ) ஸ்ரீவில்லிபுத்தூர்**

**முன்னிலை :– திரு.க.ஜெயக்குமார், பி.எல்., எல்.எல்.எம்.,**
**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி**

**2024 ம் ஆண்டு மார்ச் திங்கள் 07–ஆம் நாள் வியாழக்கிழமை**
**இ.ம.எண்.02/2024**
**இன்**
**GWOP No.591/2022**

K.மாரீஸ்வரன் ... மனுதாரர்/மனுதாரர்

/எதிர்/

A.அழகுராணி ... எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்

இம்மனு 20.02.2024–ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ஜான் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்யாத நிலையிலும், வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

இளவர் அவிக்னாவின் காப்பை இந்த மனு மற்றும் அசல் மனு முடியும் வரை மனுதாரர் காப்பில் ஒப்படைக்க எதிர்மனுதாரருக்கு உத்தரவிடுமாறும் அல்லது தினம் மதிய உணவு இடைவேளையின் போது இளவர் அவிக்னா படிக்கும் பள்ளிக்குச் சென்று அவரிடம் 20

நிமிடம் உரையாடி வரவும், வார விடுமுறை நாட்களில் இளவர் அவிக்னாவை மனுதாரருடன் அவரது பெற்றோர் வீட்டிற்கு அழைத்து வந்து உடன் வைத்துக்கொள்ள அனுமதி வழங்குமாறு மனுதாரரால் Guardian and Wards Act, 1890 Section 12(1)–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u>:–

2) மனுதாரர் அசல் வழக்கில் மனுதாரர் ஆவார். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் முறைமணம் மூலம் இல்லா நிலையில் பிறந்த தற்போது சுமார் 3 வயது நடக்கும் இளவர் குழந்தை அவிக்னாவிற்கு தன்னை காப்பாளராக நியமனம் செய்யவும், குழந்தை அவிக்னாவின் காப்பை எதிர்மனுதாரரிடமிருந்து பெற்று தன் வசம் ஒப்படைக்க கோரியும் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். இந்த எதிர்மனுதாரர் அவருக்கும், அவரது 2 வது கணவரான ராம்குமாருக்கும் விவாகரத்து ஆகிவிட்டது என தன்னிடம் பொய் சொல்லி தன்னை திருமணம் செய்து கொள்வதாக உறுதி அளித்து தன்னுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தார்.பின்னர் எதிர்மனுதாரர் பொய் கூறியது தனக்கு தெரிந்தவுடன் தனக்கும் அவருக்கும் பிரச்சனை ஏற்பட்டது. இருந்தபோதிலும் தான் தன் குழந்தை அவிக்னாவை மிகுந்த அன்பு பாசத்துடன் கவனித்து வந்ததாகவும், தற்போது தன் குழந்தை அவிக்னாவை சத்திரப்பட்டியில் உள்ள ஆறுமுகம் பழனிகுரு மாடர்ன் ஸ்கூல் CBSE பள்ளியில் சேர்த்து படிக்க வைத்து வந்ததாகவும் தினமும் மதிய உணவு இடைவேளையின்போது சென்று தன் குழந்தையை பார்த்து உரையாடி, விளையாடி வந்ததாகவும், கடந்த 3,4 வார காலமாக எதிர்மனுதாரர் மேற்சொன்ன பள்ளிக்குச் சென்று தான் குழந்தையை பார்த்து வந்ததை தடுத்துவிட்டார். பள்ளி நிர்வாகத்திடம் தனக்கும்

தன்னுடைய குழந்தை அவிக்னாவிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று பொய் சொல்லி தன் குழந்தையை பார்க்கவிடாமல் தடுத்துவிட்டார்.

3) எதிர்மனுதாரர் திடீரென்று வீட்டைமாற்றி தற்போது உள்ள முகவரிக்குச் சென்றுவிட்டார். மேலும் வேறு ஒரு நபருடன் எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ்ந்து வருகிறார். மனுதாரர் அவரது பெற்றோர்கள், தம்பி குடும்பத்துடன் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வருகிறார். மனுதாரர் இராஜபாளையத்தில் உள்ள P.A.C.R பாலிடெக்னிக்கில் DEEE பட்டயப்படிப்பு படித்து சிறு கடன்களுக்கு நிதி வழங்கும் தொழில் செய்து வருவதாகவும், மனுதாரரை குழந்தை அவிக்னாவிற்கு காப்பாளராக நியமனம் செய்து அவரது காப்பை மனுதாரரிடம் ஒப்படைத்தால் அவரை நல்லமுறையில் வளர்த்து அவருக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவேன் என்றும், மேலும் தற்போது உள்ள சூழ்நிலையில் மனுதாரர் குழந்தை அவிக்னா எதிர்மனுதாரரிடத்தில் வளர்வது அவரது உடல்நலத்திற்கும், மனநலத்திற்கும் தீங்கானது. இந்த சூழ்நிலையில் இடைக்காலமாக மனுதாரர் குழந்தை அவிக்னாவை அவரது பாதுகாப்பில் ஒப்படைக்க வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. ஆகவே இளவர் அவிக்னாவின் காப்பை இந்த மனு மற்றும் அசல் மனு முடியும் வரை மனுதாரர் பாதுகாப்பில் ஒப்படைக்க எதிர்மனுதாரருக்கு உத்தரவிடவேண்டியும், அல்லது தினம் மதியம் உணவு இடைவேளையின் போது இளவர் அவிக்னா படிக்கும் பள்ளிக்குச் சென்று அவரிடம் 20 நிமிடம் உரையாடி வரவும், வார விடுமுறை நாட்களில் இளவர் அவிக்னாவை தன்னுடன் தன் பெற்றோர்

வீட்டிற்கு அழைத்து வந்து உடன் வைத்துக்கொள்ள அனுமதி வழங்குமாறு மனுவில் கோரப்பட்டுள்ளது.

4)எதிர்மனுதாரர் தரப்பில்,எதிர்உரை தாக்கல் செய்வதற்கு போதிய காலஅவகாசம் வழங்கப்பட்டும், எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்யப்படவில்லை.

5) இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6) இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியமோ, ஆவண சாட்சியமோ இல்லை.

7)வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

<u>பிரச்சினைக்கான தீர்வு</u>:–

8) மனுதாரர், இளவர் அவிக்னாவின் காப்பை இந்த மனு மற்றும் அசல் மனு முடியும் வரை மனுதாரர் பாதுகாப்பில் ஒப்படைக்க கோரியும், அல்லது தினம் மதிய உணவு இடைவேளையின் போது இளவர் அவிக்னா படிக்கும் பள்ளிக்குச் சென்று அவரிடம் 20 நிமிடம் உரையாடி வரவும், வார விடுமுறை நாட்களில் இளவர் அவிக்னாவை மனுதாரருடன் அவரது பெற்றோர் வீட்டிற்கு அழைத்து வந்து வைத்துக்கொள்ள அனுமதி கோரியும் Guardian and Wards Act 1890 Section 12(1)ன் கீழ் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

9)மனுதாரர் தரப்பில், இந்த எதிர்மனுதாரர் அவரது 2 வது கணவரான ராம்குமாருக்கும் விவாகரத்து ஆகிவிட்டது என மனுதாரரிடம் பொய் சொல்லி மனுதாரரை திருமணம் செய்து கொள்வதாக உறுதி அளித்து மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்து

வந்துள்ளார் என்றும், பின்னர் எதிர்மனுதாரர் பொய் கூறியது மனுதாரருக்கு தெரிய வந்தவுடன் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றும், இருந்தபோதிலும் மனுதாரர் குழந்தை அவிக்னாவை மிகுந்த பாசத்துடன் கவனித்து வந்தார் என்றும், இளவர் அவிக்னா படிக்கும் பள்ளிக்கு சென்று மதிய உணவு இடைவேளையில் குழந்தையை பார்த்துவிட்டு வந்தநிலையில், எதிர்மனுதாரர் மேற்படி பள்ளிக்கு சென்று பள்ளி நிர்வாகத்திடம் மனுதாரருக்கும், குழந்தை அவிக்னாவிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று கூறி குழந்தையை பார்க்கவிடாமலும், திடீரென்று வீட்டை மாற்றிக்கொண்டும் மேலும் வேறு ஒருநபருடன் எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ்ந்து வருகிறார் என்றும், தற்போதையை எதிர்மனுதாரரின் வாழ்க்கை சூழ்நிலையில் குழந்தை அவிக்னா எதிர்மனுதாரரிடமிருந்து வளர்வது நல்லதல்ல என்றும், எனவே இடைக்காலமாக அவிக்னாவை மனுதாரர் பாதுகாப்பில் ஒப்படைக்க வேண்டும் என்றும், அல்லது தினம் மதிய உணவு இடைவேளையின் போது இளவர் அவிக்னா படிக்கும் பள்ளிக்குச் சென்று அவரிடம் 20 நிமிடம் உரையாடி வரவும், வார விடுமுறை நாட்களில் இளவர் அவிக்னாவை மனுதாரருடன் அவரது பெற்றோர் வீட்டிற்கு அழைத்து வந்து வைத்துக்கொள்ள அனுமதிக்குமாறு மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

10)எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியிருந்த நிலையிலும், எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித எதிர்உரையும் இந்த மனுவில் தாக்கல் செய்யப்படவில்லை. இந்நீதிமன்றம் மனுதாரர் தரப்பு வாதத்தையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்தது.

11) பிரதான மனு என்பது. இளவர் அவிக்னாவிற்கு இந்த மனுதாரரை காப்பாளராக நியமனம் செய்தும், எதிர்மனுதாரர் வசம் இருந்து வரும் அவிக்னாவின் காப்பை மனுதாரர் வசம் ஒப்படைக்க கோரியும் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.இந்த மனுதாரர் தரப்பில், எதிர்மனுதாரர் மனுதாரரை திருமணம் செய்து கொள்வதாக உறுதி அளித்ததன் பேரில் மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்து வந்துள்ளார் என்றும், பின்னர் எதிர்மனுதாரர் கூறியது உண்மையல்ல என்று தெரிந்தவுடன் இருவருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதாகவும் குழந்தை அவிக்னா எதிர்மனுதாரர் வசம் இருப்பதை மனுதாரர் பார்க்க விடாமல் தடுப்பதாக சொல்லப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள மனு சங்கதிகளை மறுத்துரைக்கும் வகையில் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்யப்படவில்லை.

12)அசல் மனுவில் எதிர்மனுதார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் 3 வது பாராவில் இளவர் 25.01.2020–ம் தேதி இராஜபாளையத்தில் உள்ள இராஜசுபா மருத்துவமனையில் பிறந்துள்ளார் என்பதும், மேற்படி மனுதாரரும், எதிர்மனுதாரரும் திருமணம் செய்து கொள்வதாக முடிவு செய்து இருவரும் ஒரே வீட்டில் வாழ்ந்து வந்துள்ளார்கள் என்றும் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இல்லற வாழ்க்கையின் பயனாக மைனர் அவிக்னா பிறந்துள்ளார் என்பதும் எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

13)மேலும் அசல் மனுவில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.3 ஆவணமான இளவர் அவிக்னாவின் பிறப்புச் சான்றிதழை பரிசீலனை செய்கையில், இளவர் ராஜசுபா

மருத்துவமனை இராஜபாளையத்தில் பிறந்துள்ளார் என்பதும் இளவரது பெற்றோர்கள் இந்த உபய மனுதாரர்கள் என்று காணும்நிலையிலும், தற்போது மனுதாரரும் எதிர்மனுதாரரும் பிரிந்து வாழ்ந்து வந்துள்ள நிலையிலும், மேற்படி இளவர் அவிக்னா பள்ளி செல்லும் சிறுகுழந்தை என்பதாலும், இளவர் அவிக்னாவை மனுதாரர் காப்பில் ஒப்படைப்பது உகந்தது அல்ல. அதே சமயம் மனுதாரர் அவரது மனுவில் இளவர் அவிக்னாவை பார்த்து பேசி கொள்வதற்கு அனுமதி அளித்தால் போதுமானது என்று சொல்லியுள்ள நிலையிலும், மனுதாரர் இளவர் அவிக்னாவின் தந்தை என்ற முறையில், இளவர் அவிக்னாவை பார்த்து பேசி கொள்வதற்கு அனுமதியளிப்பது உகந்ததாக இருக்கும் என்று முடிவு செய்து, மாதம் இரண்டு முறை, இரண்டாவது மற்றும் நான்காவது வெள்ளிக்கிழமைகளில் எதிர்மனுதாரர் தனது மைனர் குழந்தையை அழைத்து வந்து மாலை 4 முதல் 5 மணிவரை ஸ்ரீவில்லிபுத்தூர், மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழு முன்பு ஆஜர்படுத்த வேண்டுமென்றும், அங்கு வைத்து மேற்படி நாட்களில், மேற்படி நேரத்தில் மனுதாரர், மைனர் குழந்தையை பார்த்து பேசிக்கொள்ள வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

14) முடிவாக, இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாரர் இளவர் அவிக்னாவின் தகப்பனார் என்ற முறையில், மாதம் இரண்டு முறை, இரண்டாவது மற்றும் நான்காவது வெள்ளிக்கிழமைகளில் எதிர்மனுதாரர் தனது மைனர் குழந்தையை அழைத்து வந்து மாலை 4 முதல் 5 மணிவரை ஸ்ரீவில்லிபுத்தூர், மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழு முன்பு ஆஜர்படுத்த வேண்டுமென்றும், அங்கு வைத்து மேற்படி நாட்களில், மேற்படி நேரத்தில் மனுதாரர், மைனர்

குழந்தையை பார்த்து பேசிக்கொள்ள வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07–ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K JEYAKUMAR Digitally signed by K JEYAKUMAR

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**விருதுநகர் மாவட்டம்,**
**(இ)ஸ்ரீவில்லிபுத்தூர்.**

<u>உபய தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள் :–</u> – இல்லை–

K JEYAKUMAR Digitally signed by K JEYAKUMAR

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**விருதுநகர் மாவட்டம்,**
**(இ)ஸ்ரீவில்லிபுத்தூர்.**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்
இ.ம.எண்.2/2024
இன்
GWOP No. 591/2022
செவ்வை–வரைவு உத்தரவு
நாள் –07.03.2024